Copyright©2022 Nanayam Vikatan
Sun, 28 Jan-24; Nanayam Vikatan - Chennai; Size : 1126 sq.cm.; Circulation:200000; Page : 51

கல்வி

அமித் யாதவ்,
முதன்மை வியூக அதிகாரி & முதன்மை வணிக அதிகாரி-டிஜிட்டல் பிசினஸ், அவான்ஸ் ஃபைனான்ஸியல் சர்வீசஸ்





# வெளிநாட்டுக்குப் படிக்கப் போறீங்களா... இந்த ஃபைனான்ஷியல் திட்டம் முக்கியம்!

வெளிநாட்டில் கல்வி பயில்வது, மாணவர்களை வளப்படுத்தும் ஓர் அருமையான அனுபவம் ஆகும். இது அவர்களின் கல்வி அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், சுதந்தரமாகச் செயல்படவும், பல புதிய கலாசார உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. மேலும், சர்வதேச சமூக இணைப்புகள் மூலம் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் திறவுகோலாகவும் வெளிநாட்டுப் படிப்பு திகழ்கிறது.

மத்திய கல்வி அமைச்சகத்தின் அறிக்கையின்படி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை, கல்வி ஆண்டு 2022-ல் 97 லட்சமாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆறு வருடங்களின் அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை ஆகும்.

வெளிநாடுகளில் சென்று படிக்கும் மாணவர்களுக்கு சமயோசிதமான மற்றும் சில உதவிகரமான நிதிநிலைத் திட்டமிடல் உத்திகள் பற்றி பார்ப்போம்.

**நிதிநிலைத் திட்டமிடல்...**

வெளிநாட்டில் படிக்கும் மாணவர்கள் பொதுவாக, பல வகையான கட்டணம் மற்றும் செலவுகளைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே, வெளிநாட்டில் அவர்கள் படிக்கும்போது நிதித் திட்டமிடலை உருவாக்கி, அதைத் தொடர்வது மிக அவசியமான ஒன்று.

மாணவர்கள் பல்வேறு வழிகளிலும் கிடைக்கும் நிதியைப் பற்றி அவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, பகுதி நேரமாக வேலை பார்ப்பதன் மூலம் கிடைக்கும் நிதி, குடும்பத்தினர் மூலம் கிடைக்கும் நிதி மற்றும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் கடன் உதவிகளுக்கு பல்வேறு வழிமுறைகள் நடைமுறையில் உள்ளன. தவிர, கல்வி பயிலும் பல்கலைக் கழகங்கள் மூலமாகக் கல்வி ஊக்கத் தொகை, உதவித் தொகை வழங்கப்படுகின்றன.

ஆகையால், கல்வி பயிலும் மாணவர்கள் அனைத்து வழிமுறைகளிலும் உள்ள நன்மை, தீமைகளை அலசி ஆராய்ந்து முழுமையாகப் புரிந்துகொள்வது அவசியம் என்பதுடன்

தெளிவான நிதிநிலைத் திட்டத்தையும் உருவாக்குவது அவசியமாகும்.

வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களின் கல்விக் கட்டணம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து, புத்தகங்கள் மற்றும் மாணவர் களின் தனிப்பட்ட செலவுகள் எனப் பலவற் றையும் பட்டியலிட வேண்டும். மேற்கண்ட செலவுகளுக்கேற்ப சரியான முறையில் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதற்கேற்ப செலவுகளைச் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். இது மிக அவசியமான ஒன்று.

வெளிநாடுகளில் படிக்கும்போது கல்வி வளாகத்தையும் தாண்டி, வெளிப்பகுதிகளுக்கும் செல்ல வேண்டிய சூழல் ஏற்படலாம். அதையும் நீங்கள் ஆராய்ந்து அதற்கேற்ப உங்கள் நிதி நிலையைத் திட்டமிட வேண்டி இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் கணக்கீடுக்கு மேல் ஒரு சிறு தொகையைத் தனியாக ஒதுக்கி வைப்பது கட்டாயம். இது மிக அவசியமான, அவசரமான காலகட்டத்தில் உதவும்.

**சர்வதேச வங்கிக் கணக்கு...**

வெளிநாட்டில் படிக்கும் மாணவர் தங்கள் நிதியை நிர்வகிக்க சர்வதேச அளவிலான வங்கிக் கணக்கு வைத்திருப்பது அவசியமான ஒன்று. அதன் மூலம் வங்கிகளில் இருந்து கல்விக் கடன் பெறுவது அல்லது வீட்டில் இருந்து பணம் பெறுவது, மற்ற பல்வேறு நிதி நிர்வாகத்துக்கும் அவசியமானதாக இருக்கும்.

அதோடு சர்வதேச அளவில் பயன்படுத்தும் கார்டுகளை உபயோகித்து, நீங்கள் பணம் எடுக்கும்போது, உங்களுக்கு விதிக்கப்படும் கூடுதல் கட்டணத்திலிருந்தும் தப்பிக்கலாம். ஆக, வெளிநாட்டில் கல்வி பயிலச் செல்கிறீர்கள் எனில், கட்டாயம் இதைத் தெரிந்துகொண்டு தேவையான சர்வதேச வங்கிக் கணக்குகளைத் தொடங்கிக்கொள்வது நல்லது.

வெளிநாட்டில் படிக்கும் மாணவர்கள் பலரும் அவர்களுக்குக் கிடைக்கும் ஒய்வு நேரத்தில் பகுதி நேர வேலைக்குச் செல் கிறார்கள். இப்படி பகுதி நேரமாக நீங்கள் பணிபுரிந்தால், அதற்கு சம்பளத்தைப் பெறவும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும் இந்த சர்வதேச வங்கிக் கணக்குகள் நிச்சயம் உதவும்.

**சேமிப்புத் திட்டத்தை உருவாக்குங்கள்...**

'செலவுகளுக்குப் பிறகு சேமிக்காதே. சேமித்த பிறகு மிச்சம் இருக்கும் தொகையை செலவு செய்' என்பது வாரன் பஃபெட்டின் கருத்து. இதைப் புரிந்துகொண்டு மாணவர்கள் சிறிய தொகையையாவது சேமித்த பிறகு செலவு செய்ய வேண்டும். இது அவசர கால கட்டங்களில் அவர்களுக்கு பல்வேறு வழிகளில் மிகுந்த பயனுள்ள ஒன்றாக இருக்கும்.

வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களின் சேமிப்பு மற்றும் வருமானத் திட்டங்களானது இனி பெற்றோரின் பொறுப்பாக மட்டுமே இருக்கக் கூடாது. மாணவர்களும் அதைத் தெரிந்துகொண்டு முன்னேற வேண்டும். தங்கள் கல்விக்காக வாங்கிய கல்விக் கடனை சரியான நேரத்தில் திரும்ப செலுத்தத் தயாராக இருக்க வேண்டும். ஆக, மாணவர்கள் அனைத்து வகையிலும் கவனமாகச் செலவு செய்து சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

பொதுவாக, வெளிநாடுகளில் படிக்கும் போது மாணவர்கள் எதிர்பாராத விதமாக எதிர்கொள்ளும் ஒரு பெரும் பிரச்னை உடல் நல பாதிப்பால் ஏற்படும் மருத்துவச் செலவுகள் தான். தங்கள் குடும்பத்தினரை விட்டு தனியாக சென்று படிக்கும் மாணவர்கள் புதிய உணவு கலாசாரம், புதிய சுற்றுச்சூழல் என இருக்கும். இதனால் அவர்களின் உடல்நலம் எளிதில் பாதிப்படையலாம். இதுவே அந்தச் சமயத்தில் பெரும் செலவாக மாறக்கூடும்.

இதைச் சரியாக நிர்வகிக்க வேண்டும் எனில், சரியான ஹெல்த் இன்ஷூரன்ஸ் *(Health Insurance)* பாலிசி எடுக்க வேண்டும். இது அவசர மருத்துவச் செலவுகள், விபத்துக் காப்பீடு, எதிர்பாராத துரதிர்ஷ்டவசமான சம்பவங்களுக்கேற்ப ஈடுகட்டுவதாக இருக்க வேண்டும். எனவே, இதையும் தெளிவாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவது அவசியமான ஒன்று.

**மாணவர்களுக்கான சலுகைகள்...**

வெளிநாட்டில் படிக்கச் செல்லத் திட்ட மிடும் மாணவர்கள், தாங்கள் படிக்கச் செல்ல திட்ட மிட்டுள்ள நாட்டுக்குச் செல்ல ஏதேனும் தள்ளுபடிகள், ஏதேனும் உதவிகள், நன்மைகள் கிடைக்கிறதா என்பதையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இதுவும் உங்களுக்கு

ஒரு கணிசமான தொகையை மிச்சப்படுத்தலாம்.

உதாரணமாக, வெளிநாட்டில் உள்ள உணவகங்கள், திரையரங்குகள், போக்குவரத்து சேவைகள் வழங்கும் நிறுவனங்கள், பொதுவாக மாணவர்களுக்கு எனச் சில தள்ளுபடி சலுகைகளை வழங்குகின்றன. இது போன்ற அம்சங்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்.



சில வங்கிகளில் மாணவர்களுக்கு தள்ளுபடிகளை வழங்கும் கார்டுகள் வழங்கப்படுகின்றன. அது போன்ற சிறப்பான சலுகைகள் ஏதேனும் கிடைக் கின்றவா என ஆராய்ந்து பார்க்கலாம். இதுவும் சில சமயங்களில் மிக உதவிகரமான ஒன்றாகவும் இருக்கலாம். பணத்தை மிச்சப்படுத்த பயனுள்ள ஒன்றாகவும் இருக்கலாம்.

**படிக்கும்போதே சம்பாத்தியம்...**

வெளிநாட்டில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் தங்கள் செலவுகளைப் பகுதி நேர வேலை மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சமாளிக்கிறார்கள். படிக்கும்போது பலரும் பகுதி நேரமாக வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என நினைக்கின்றனர். இது அவர்களின் செலவுக்கு நிச்சயம் பயன்படும். அவர்களின் கல்விக் கடன் வட்டியில் சற்று சுமையைக் குறைக்க உதவும்.

எனினும், தங்கள் பகுதிநேர வேலை என்பது அவர்களின் கல்வியில் எந்த இடையூறும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், கல்வி மட்டுமே அவர்களின் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

**கல்விக் கடனைத் திரும்ப செலுத்துதல்...**

வெளிநாட்டில் படிக்கும் மாணவர் ஒருவேளை, கல்விக் கடன் வாங்கியிருந்தால், அதைச் சரியான நேரத்தில் செலுத்தத் திட்டமிட்டு இருக்க வேண்டும். மாணவர்களுக்கு இதற்காக குறிப்பிட்ட கால அவகாசம் (*Moratorium*) கொடுக்கப்பட்டு இருந்தாலும், இது வட்டி இல்லாத காலம் இல்லை. நீங்கள் வாங்கிய நாளிலிருந்து வட்டி செலுத்த வேண்டியிருக்கும். மாணவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு ஒரு சிறு பங்களிப்பை செய்யத் திட்டமிட வேண்டும். இது அவர்களுக்கு நிதி ரீதியில் நல்ல பழக்கத்தை உருவாக்கும்.

வெளிநாட்டில் படிப்பது மாணவர்களுக்கு தங்கள் கல்வித் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்ல, தனிப்பட்ட நிதி ரீதியான நிர்வாகத் திறனை வளர்த்துக்கொள்ள பயன்படும். புதிய சுதந்திரமான வாழ்க்கை முறைக்கு மத்தியில், அவர்களுக்குக் கிடைக்கும் அதிகமான நேரத்தைப் பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தங்கள் நிதி நிர்வாகத்தை சரியாகச் செய்யும்போது, அவர்களின் கல்விக் கடனை திரும்ப செலுத்துவது என்பது எளிது. இதன் மூலம் அவர்கள் நல்ல கிரெடிட் ஸ்கோரை உருவாக்க முடியும்.

எனவே, வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் தங்கள் எதிர்கால நலன் கருதி கல்விக் கடனை பொறுப்புடன் செலுத்துவது மிக நல்லது. இதுதான் எதிர்காலத்தில் நிதி நிர்வாகத்தில் சிறந்த உத்திகளைக் கையாண்டு பெரிய கோடீஸ்வரராக உங்களை உருவாக்கும் அடிப்படை அம்சம் ஆகும்!